2013 ஏப்ரல் 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.*

திரு. ம. முத்துராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கண்மாயைத் தூர்வாருவதற்கும், திருமங்கலம் நகரக் கால்வாயைச் சீரமைப்பதற்கும் உத்தரவிட்டுள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியினைக் கூறி அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 204, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. வெங்கடாஜலம், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

204—

கட்டட வசதி

***7334—திரு. கோ. வெங்கடாஜலம்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சி, காமநாயக்கன்பட்டி கால்நடை மருத்துவமனைக்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சேலம் மேற்கு தொகுதியிலே உள்ள காமநாயக்கன்பட்டி கால்நடை மருத்துவமனைக்குப் புதிய கட்டடம் கட்டித் தரப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அதற்கான இடம் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. ஏற்கெனவே தேர்வு செய்யப்பட்ட இடம் கரடு புறம்போக்கு என்பதால், அதில் கட்ட முடியாது. எனவே, புதிய இடம் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருவதால், இடம் தேர்வு செய்யப்பட்ட பின்பு, அங்கே கட்டடம் கட்ட மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்களின்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2013 ஏப்ரல் 10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. வெங்கடாஜலம் அவர்கள்.

திரு. கோ. வெங்கடாஜலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திட்டத்தைத் தேடி மக்கள் என்ற நிலையை மாற்றி, மக்களைத் தேடி திட்டம்' என்று வழிவகுத்த வள்ளலின் வாரிசு! (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக மக்களின் குலவிளக்கு! சாதாரண குடிசையில் வாழும் ஏழையெளிய மக்களுக்கும் பசுமை வீடுகள் கட்டும் திட்டத்தை உருவாக்கி, 2 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாயினை வழங்கி, கூரை வேய்ந்த வீடு கட்டிக்கொள்ள வழிவகுத்த ஏழைகளின் ஒளிவிளக்கே! அப்பசுமை வீட்டிற்கும் சோலார் மின்சாரம் தந்த தங்கத் தாரகையே! வறுமைக்கோட்டிற்குக்கீழே வாழும் மக்களுக்குப் பசு மாடுகள், செம்மறி ஆடுகள் போன்றவற்றை வழங்கி, ஏழையெளிய மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திக் கொடுத்து தெய்வமாக விளங்கும் கோமாதாவே! எங்கள் குலவிளக்கே! நான் நித்தம் வணங்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

சேலம் மேற்கு தொகுதி, சேலம் மாநகராட்சிக்குட்பட்ட காமநாயக்கன்பட்டியில் நீண்ட காலமாக கால்நடை மருத்துவமனை வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அந்த மருத்துவமனைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட இடம் தேர்வு செய்யப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அந்தக் கட்டடத்திற்கு அருகிலேயே இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான 5 ஏக்கர் பரப்பளவு கொண்ட நிலம் காலியாக உள்ளது. அந்த இடத்தில் கட்டடம் கட்டுவதற்கு வழிவகை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். இடம் தேர்வு செய்யப்படுவதாக அறிவித்தமைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 10—50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட 5 ஏக்கர் நிலம் எந்த வகையைச் சார்ந்தது என்பதை

2013 ஏப்ரல் 10]

மாவட்ட ஆட்சியர் அவர்கள் ஆய்வு செய்த பின்னர், அந்த இடம் சரியான இடம் என்று சொன்னால், நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, அங்கே கட்டடம் கட்டப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 205, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

205—

உணவு பதப்படுத்தும் தொழிற்சாலை

***7213—திரு. ரா. சரத்குமார்**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதியில் உணவு பதப்படுத்தும் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தென்காசி பகுதியில் தோட்டக்கலைப் பயிர்களான வாழைப்பழம், மாம்பழம், நெல்லிக்காய், வெங்காயம், தக்காளி, கத்திரிக்காய், முந்திரி, மிளகாய் மற்றும் கேந்திப்பூ முதலியவை விளைவிக்கப்படுகின்றன. உள்ளூர் நுகர்வுபோக மீதம் இருப்பதை பதப்படுத்தி, மதிப்புக் கூட்டி, அவற்றை விற்பனை செய்வதற்கான திட்டப் பணிகள் குறித்து ஆய்வினை மேற்கொண்டு, அதுகுறித்த முதலீடு மற்றும் சாத்தியக்கூறு அறிக்கையுடன், தகுந்த தொழில்முனைவோர்கள் நாடினால், TIDCO மூலம் தொழிற்சாலை நிறுவ, மாண்புமிகு அம்மாவின் அரசு பரிசீலித்து, கூட்டு முயற்சியில் செயல்படுத்த முடிவு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள், இருக்கையில் இல்லை.*